**<u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>**

**அனுப்புநர்**

**முனைவர். ப. ராஜ்குமார், MA.,LLB.,Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 5733/2015 / எம்சி. 8 நாள் : 16.07.2015</u>**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற **அவசரக் கூட்டம் 17.07.2015 வெள்ளிக்கிழமை மாலை 4.45** மணிக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

**மாமன்ற அவசரக் கூட்டம் - ஜுலை 2015**

**நிகழ்ச்சி நிரல்**

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகள், பாதாள சாக்கடை குழாய் அமைப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், குடிநீர் குழாய்கள் மற்றும் கேபிள்கள் பதிப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளைப் புதுப்பிக்கவும் மற்றும் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக தார் சாலைகள் அமைத்தல் - சாலைகள் சீரமைக்கத் தேவையான தொகை ரூ. 100.00 கோடியினை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை லிமிடெட் (TNUIFSL) நிறுவனத்திடம் இருந்து கடனுதவி பெற்று பணிகள் மேற்கொள்ளுதல் - நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தின் அனுமதி கோரி கருத்துரு மற்றும் விரிவான திட்ட அறிக்கை அனுப்ப 28.05.20155-ல் மாமன்ற தீர்மானம் எண் 25 நிறைவேற்றப்பட்டது- விரிவான திட்ட அறிக்கைகள் சரிபார்க்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது - தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு நிறுவனம் (TNUDF) மூலம் KFW ஜெர்மன் நிதி உதவி வங்கி அல்லது உலக வங்கியிலிருந்து கடனுதவி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுமதி கோரி கருத்துரு மற்றும் திருத்திய விரிவான திட்ட அறிக்கை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **2** | நிர்வாகம் - கல்வி – இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டு குழு - 2nd Asian School Athletics U-18 Boys & Girls Championship to be held at Wuhan P.R. China – தெரிவு மற்றும் தேசிய பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மாநகராட்சி சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி 12-ம் வகுப்பு மாணவன் செல்வன். என்.விவேகானந்தன் - தேர்வு செய்யப்பட்டது – சீன நாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்படும் செலவினங்களுக்கு அவசர அவசியம் கருதி மாநகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - குனியமுத்தூரில் புதிய தெற்கு மண்டல அலுவலக கட்டிடம் கட்டுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | பொதுக் கணக்குப் பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கதர் கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து, மாநகராட்சிப் பணியாளர்களுக்கு கதர்க்கடன் வழங்கிய வகையில் நிலுவையாக உள்ள தொகை ரூ.2,42,561.65பைசாவை நேர் செய்தல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **5** | பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – பொங்கல் பண்டிகையை முன்னிட்டு துப்புரவுப் பணியாளர்களுக்கு பொங்கல் பொருள்களுக்கான தொகை வழங்கியது – மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **6** | பொது சுகாதாரம் - மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் பன்றிகளை பிடித்தல் - திரு. ஆர். சிவக்குமார், (ஆல் இந்தியா பிக் அண்டு டாக் கேட்சர்ஸ்) அவர்களுக்கு அனுமதி அளித்தல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **7** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 85 – சாவித்திரி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **8** | பொறியியல் பிரிவு - சிறுவாணி அடிவாரம் முதல் காந்திபூங்காவில் உள்ள தரைமட்ட தொட்டிவரை அமைக்கப்பட்ட பழைய பழுதடைந்த 450 மிமீ விட்டமுள்ள இரும்பு குடிநீா் குழாய்களை மாற்றியமைத்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடா்பாக |
| **9** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்துா் மாநகராட்சி பகுதியில் புதியதாக 7 நிழற்குடைகள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 18 நிழற்குடைகளை புனரமைத்தல் - தி/ள் ஸ்கைராம்ஸ் அவுட்டோா் அட்வா்டைசிங் இந்தியா பி.லிட், நிறுவனத்திற்கு ஆண்டு குத்தகை அடிப்படையில் விளம்பர உரிமத்துடன் 15 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணியா் நிழற்குடைகளை புதுப்பித்தல் - பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் 15 ஆண்டு முடிவிற்கு பின்னா் மேலும் 5 ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்குதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடா்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 57 – மசக்காளிபாளையம் பெரியாா் நகரில் குடிநீா் குழாய் பதித்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **11** | பொறியியல் பிரிவு - பேரூா் குளக்கரை மற்றும் உக்கடம் குளக்கரையில் இரும்பிலான தடுப்பு அமைத்தல் - வெள்ளலுாா் குப்பை கிடங்கு வளாகத்தில் அபிவிருத்தி மற்றும் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் கோருதல் - தொடா்பாக |
| **12** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **13** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 82 –க்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் சேம்பா்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **14** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 7 – சங்கிலி கோனாா் தோட்டம் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் தாா்தளம் புதுப்பித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **15** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **16** | பொறியியல் பிரிவு - சிறுவாணி குடிநீா் திட்டத்திற்கான மத்துவராயபுரம் கிராமம் சிறுவாணி பிரதான சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான (கிராமம் எண்.16புல எண்.23) சுமாா் 3.50 ஏக்கா் நிலத்தின் ஒரு பகுதியில் மாநகராட்சி மூலம் ஆய்வு மாளிகை கட்டுதல் – முழுமையான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்க விருப்பு கேட்பு அறிக்கை கோரவும் அதற்குண்டான செலவின தொகையை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 41 –கணபதி ராமகிருஷ்ணாபுரம் நடுநிலைப்பள்ளி முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 5 அசோக் நகா் கவுண்டம்பாளையம் பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் பணி மற்றும் வாா்டு எண்.5 கவுண்டம்பாளயம் மயானத்தில் தியானமண்டபம், நடைபாதை ஆழ்குழாய் கிணறு ஆகியவை அமைத்து கழிப்பிட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **19** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **21** | பொறியியல் பிரிவு - வாா்டு எண்.75 – நஞ்சுண்டாபுரம் மேம்பாலம் இணைப்பு சாலைக்கு தாா் தளம் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **22** | பொறியியல் பிரிவு - தனியாா் லாரிகள் மூலம் குடிநீா் விநியோகம் செய்தல் - ஒப்பந்த காலம் முடிவடைதல் - மதிப்பீடு 75.00 இலட்சத்திற்கு நிா்வாக அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **23** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |

| | |
|---|---|
| **24** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 99 – முல்லை நகர் பொது ஒதுக்கீடு இடத்தில் கீழ்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்தல் மற்றும் நீர்தேக்க தொட்டியிலிருந்து வெள்ளலூர் சாலை வழியாக மேட்டுர் நீர்தேக்க தொட்டி வரை வார்பிரும்பு குழாய் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **25** | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் இரண்டு பயோகேஸ் உயிர் எரிவாயு கூடங்களை முன்னர் உத்தேசிக்கப்பட்ட ஆர்.எஸ்.புரம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நிறுவுவதற்கு பதிலாக வெள்ளலூர் பகுதியில் அமைந்துள்ள மண்புழு உரம் தயாரிக்கும் நிலையத்தில் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **26** | பொறியியல் பிரிவு - கோவை மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு Wi-Fi இணையதள சேவை வசதியினை ஏற்படுத்துதல் - நிறுவனங்களிடம் திட்ட வரைவுகள் பெறப்பட்டது - குறிப்பிட்ட கால அளவில் பொதுமக்கள் இலவசமாக உபயோகப்படுத்தும் வகையிலும் இலவச கால அளவு முடிந்தவுடன் கட்டணம் நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதியின் பேரில் விரிவாக திட்ட செயலாக்கத்துடன் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது -மாமன்ற பின்னேற்பு கோருதல் கோருதல் - தொடர்பாக |
| **27** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **28** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 37 – அவினாசி சாலை P.S.G. கலைக்கல்லூரி மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை அருகில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் - மதிப்பீடு ரூ. 75.00 இலட்வம் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **29** | Jnnurm - பொது மக்களிடையே திடக்கழிவு மேலான்மையின் முக்கிய அம்சமான மறுசுழற்சிக்கான உலர் கழிவுகளை தரம் பிரித்தல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மிகப்பெரிய மறுசுழற்சி பாடம் (LARGEST RECYCLING LESSON) என்ற தலைப்பிடப்பட்ட புதிய பிரிவின் கீழ் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் (GUINNESS BOOK OF WORLD RECORDS) ஒரு சாதனை நிகழ்வினை நடத்துதல் -திட்ட ஆலோசகர் நியமிக்கப்பட்டது – செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **30** | Jnnurm - கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களில் ஐந்து (ஒரு மண்டலத்திற்கு ஒன்று வீதம்) திடக்கழிவு பூங்காவுடன் கூடிய உலர் மறுசுழற்சிக்கான கழிவுகள் சேமிப்பு மையங்களை ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **31** | பொறியியல் பிரிவு - மத்திய அரசின் நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் சிட்டி (Smart City) திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகர் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட உள்ளதை கோயம்புத்தூர் மாநகராட்சி முழுமையாக ஏற்றுக்கொண்டு, இத்திட்டத்தின் கீழ் அங்கம் வகிப்பதற்கும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசு வழங்கும் வழிகாட்டுதலின் படியும், நிபந்தனைகளுக்குட்பட்டும் அனைத்து பணிகளையும் செவ்வனே செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இசைவு தெரிவித்தல் – மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - |

| | |
|---|---|
| **32** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதசாரிகள், மிதிவண்டி, மோட்டார் சைக்கிள்கள், மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், மற்றும் பிற போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றை இயக்குபவர்கள் மற்றும் பொது மக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்ய ஏற்ற வகையில் சாலைகளை அமைத்தல், நிலையான நகரங்களுக்கிடையேயான போக்குவரத்து மேம்பாடு ,நகர்புற மாதிரி சாலைகள் வடிவமைத்தல் , பசுமை பாதைகள் அமைத்தல் , புவியியல் சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளுதல் , மாநகராட்சி பகுதிகளில் வாகனங்கள் நிறுத்துமிடங்கள் அமைத்து இயக்கி பராமரித்தல் பணிகள்– தி/ள் இன்ஸ்டியூட் பார் டிரான்ஸ்பொட்டேசன் டெவலப்மண்ட் பாலிசி நிறுவனத்தின் மூலம் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது–திட்ட அறிக்கையினை ஒப்புதல் பெறவும், திட்டங்களுக்குத் தேவையான உரிய அனுமதிகள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரகத்துக்கு உரிய பிரேரரணைகளை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **<u>திருக்குறள்</u>**

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அ∴தொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

**(குறள் - 220**

**<u>விளக்கம்</u>**

பிற நலன்களை இழக்க வேண்டியிருந்தாலும் சமுதாயத் தொண்டில் முழுமையாக ஈடுபடத் தயங்கக் கூடாது.

**திருவள்ளுவர்**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம்**

" மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆர். கே. நகரிலே பெற்ற இமாலய வெற்றியை ஒட்டி இன்றைக்கு ஒரு சிறப்பு தீர்மானம்

" நின்றால் பொதுக்கூட்டம்
நடந்தால் பேரணி
பேசினால் மாநாடு "

என்ற வரலாற்றை உருவாக்கி உள்ள நமது சாதனை தலைவர், சாதனை பயணத்தில் மேலும் ஒரு மைல் கல்லாக, யாரும் தகர்த்தெறிய முடியாத அளவிற்கு நடந்து முடிந்த ஆர். கே. நகர் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி பதிவான வாக்குகள் சதவிகிதம் 74.4. நமது முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்ற வாக்குகள் **85** சதவிகிதம் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதை பார்த்துத்தான் **New York Times** என்ற பத்திரிக்கை **Her Thoughts are Pure, Her Heart is Pure, She feels always for the Poor** என்ற செய்தியை வெளியிட்டுள்ளது. இதை உணர்ந்த ஆர். கே. நகர் தொகுதி மக்கள் அம்மாவை முழுவதுமாக ஏற்று **1,50,722** வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெற செய்துள்ளனர். இந்த இமாலய சாதனை வெற்றியை இந்த மாமன்றம் பாராட்டுகிறது" என்ற சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 17.07.2015</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகள், பாதாள சாக்கடை குழாய் அமைப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், குடிநீர் குழாய்கள் மற்றும் கேபிள்கள் பதிப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளைப் புதுப்பிக்கவும் மற்றும் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளில் 189.17 கிமீ நீளமுள்ள சாலைகளை அமைக்க மற்றும் சீரமைக்க தேவையான தொகை ரூ.100 கோடியினை தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதிசேவை லிமிடெட்(TNUIFSL) நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுமதி கோரி கருத்துரு மற்றும் திருத்திய விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அனுப்பப்பட்டதற்கு மாமன்ற தீர்மான எண். 25 நாள்.28.05.2015 ல் பின்னேற்பு வழங்கப்பட்டுள்ளது .

இந்நிலையில் TNUIFSL அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி இம்மாநகராட்சிலிருந்து அனுப்பப்பட்ட ரூ.100.00/– கோடி மதிப்பீட்டிற்கான சாலை பணிகளின் விரிவான திட்ட அறிக்கைகள் சரிபார்க்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டதை தொடர்ந்து பணிகளுக்கான பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு மண்டலம்

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் (கீ.மீ) | அகலம் (மீ) | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ஸ்ரீதேவி நகர் மற்றும் சக்தி கார்டன் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 0.63 | 5.50 | 48.00 |
| 2 | 2 | வி.சி.வி. கார்டன் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 0.70 | 6.00 | 52.00 |
| 3 | 3 | பாலசுப்பிரமணியம் நகர் மற்றும் திருவள்ளுவர் நகர் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 0.89 | 5.00 | 56.00 |
| 4 | 3 | வைலட் கார்டன் மற்றும் பெஸ்ட் பீப்பிள் காலனி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.00 | 5.00 | 62.00 |
| 5 | 4 | எஸ்.எஸ்.கார்டன் மற்றும் டி.என்.பி நகர் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 0.75 | 5.00 | 47.00 |
| 6 | 4 | காளியம்மன் காலனி மற்றும் எஸ்.எம்.டி காலனி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.10 | 5.00 | 68.00 |
| 7 | 26 | காந்தி நகர் மற்றும் ராகவேந்திரா கார்டன் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.15 | 5.00 | 83.00 |
| 8 | 27 | ரமணீஸ் மயூரி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 1.30 | 4.50 | 87.00 |
| 9 | 29 | ஜனதா நகரில் உள்ள மடாலயம் சாலை பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 2.19 | 7.00 | 81.00 |
| 10 | 30 | விநாயகர் நகர் பிரதான சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 2.47 | 4.50 | 63.00 |
| 11 | 31 | அரசினர் குடியிருப்பு சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 1.33 | 7.00 | 74.00 |
| 12 | 31 | கார்த்திக் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 2.17 | 4.50 | 60.00 |
| 13 | 38 | வி.ஆர்.லே அவுட், நாராயணசாமி லே அவுட் மற்றும் ராஜு நாயுடு லே அவுட் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.67 | 6.00 | 87.00 |
| 14 | 39 | ஆவாரம்பாளையம் சாலையில் உள்ள எம்.ஜி. சாலை முதல் அவிநாசி சாலை வரை மறுதார்தளம் அமைத்தல் | 1.10 | 8.00 | 86.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 40 | வி.ஜி.ராவ் நகர் பிரதான சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 0.95 | 7.50 | 88.00 |
| 16 | 40 | சோபா நகர் ரயில்வே பாலம் முதல் ஆவாரம்பாளையம் சாலை சந்திப்பு வரை மறுதார்தளம் அமைத்தல் | 0.85 | 8.00 | 79.00 |
| 17 | 40 | நவ இந்தியா சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 0.70 | 9.00 | 84.00 |
| 18 | 40 | எஸ்.என்.ஆர். சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 0.60 | 8.50 | 67.50 |
| 19 | 40 | அபிராமி நகர், அம்பாள் நகர் மற்றும் வரதராஜு நகர் குறுக்கு சாலை பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 1.65 | 6.00 | 82.00 |
| 20 | 41 | எப்.சி.ஐ. குடோன் முதல் காந்திமாநகர் சந்திப்பு வரை மறுதார்தளம் அமைத்தல் | 0.80 | 9.00 | 88.00 |
| 21 | 41 | பாலாஜி லே அவுட் மற்றும் அம்பாள் நகர் பிரதான சாலை பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.65 | 5.00 | 84.00 |
| 22 | 42 | சின்னவேடம்பட்டி பிள்ளையார் கோவில் வீதி மற்றும் மினி பஸ் சாலை பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.72 | 5.50 | 85.00 |
| 23 | 43 | அடப்புத் தோட்டம் மற்றும் சாஸ்திரி நகர் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 1.65 | 7.00 | 86.00 |
| 24 | 47 | காந்தி நகர் பிரதான சாலை முதல் டீச்சர்ஸ் காலனி வரை மறுதார்தளம் அமைத்தல் | 0.62 | 7.50 | 59.00 |
| 25 | 47 | சி.என்.கல்யாண மண்டபம் சாலைக்கு மறுதார்தளம் அமைத்தல் | 0.75 | 7.50 | 71.00 |
| **மொத்தம்** | | | **30.39** | | **1827.50** |

**<u>தெற்கு மண்டலம்</u>**

| **வ. எண்** | **வார்டு எண்** | **வேலையின் பெயர்** | **நீளம் (கி. மீ)** | **அகலம் (மீ)** | **தொகை இலட்சத்தில்** |
|---|---|---|---|---|---|
| 1 | 86 & 89 | வார்டு எண்.86 க்குட்பட்ட கல்லாமேடு குறுக்கு வீதி மற்றும் பழனிசாமி தோட்டம் பகுதியில் மறுதார் தளம் மற்றும் வார்டு எண்.89 க்குட்பட்ட பாலாஜி நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல். | 2.240 | 4.50 | 88.00 |
| 2 | 87 | மகாராஜா காலனி மற்றும் கிளாசிக் பார்க் பகுதியில் தார் தளம் அமைத்தல். | 2.90 | 4.50 | 98.00 |
| 3 | 88 | வெற்றி திருநகர் மற்றும் லட்சுமி நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல். | 1.670 | 4.00 | 80.00 |
| 4 | 87 & 89 | பாலக்காடு பிரதான சாலை முதல் சுண்டக்காமுத்தூர் புட்டுவிக்கி சாலை வரையுள்ள இணைப்பு சாலைக்கு தடுப்பு சுவர்ருடன் தார் தளம் அமைத்தல். | 2.300 | 7.00 | 1215.00 |
| 5 | 89 | ஜூடிசியல் காலனி மற்றும் ஸ்ரீ விநாயகா நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல். | 1.820 | 4.10 | 78.50 |
| 6 | 90 | மீனாச்சி நகர் பிரதான சாலை, காந்தி நகர் மற்றும் கோவைபுதூர் ஹவுசிங் யுனிட் X பிளாக் மற்றும் A பிளாக் பகுதிகளுக்கு தார் தளம் அமைத்தல். | 2.265 | 5.00 | 77.90 |
| 7 | 90 | கோவைபுதூர் ஹவுசிங் யுனிட் U பிளாக், V பிளாக் மற்றும் S பிளாக் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல். | 2.280 | 5.00 | 73.50 |
| 8 | 90 | கோவைபுதூர் ஹவுசிங் யுனிட் T பிளாக், W பிளாக் மற்றும் A பிளாக் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல். | 2.650 | 5.00 | 79.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 92 | கிருஷ்ணசாமி நகர் விஸ்தரிப்பு, EB காலனி விஸ்தரிப்பு மற்றும் ராஜ ராஜேஸ்வரி நகர் குறுக்கு வீதி பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 2.720 | 5.00 | 80.00 |
| 10 | 92 | கிருஷ்ணா நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல். | 1.265 | 5.00 | 46.00 |
| 11 | 92 & 93 | குமரன் கார்டன் பிரதான சாலை, அன்னை நகர், ராஜகோபால் நகர் மற்றும் சக்தி நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 2.700 | 5.00 | 83.00 |
| 12 | 93 | அம்மன் காலனி குறுக்கு வீதி, மணிகண்டன் நகர் குறுக்கு வீதி மற்றும் வெங்கடராமன் காலனி பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 2.270 | 4.70 | 70.00 |
| 13 | 95 | எம்.எஸ் கார்டன் பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.450 | 5.00 | 83.50 |
| 14 | 95 | நேரு வீதி, திருவள்ளுவர் நகர், அம்மன் நகர் மற்றும் கதிரவன் நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 2.435 | 5.00 | 88.50 |
| 15 | 97 | ஹவுசிங்யுனிட் பேஸ்–I குறுக்கு வீதி, குறுஞ்சி நகர் மற்றும் காமராஜ் நகர் வீதி பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.470 | 5.00 | 83.90 |
| 16 | 97 | பிள்ளையார் புரம் முதல் நாகராஜபுரம் வரை உள்ள பகுதிகளுக்கு தார் தளம் அமைத்தல். | 0.985 | 5.00 | 68.50 |
| 17 | 97,98 | MGR நகர் (old) வீதி உத்தமி நகர், காந்தி நகர் லட்சுமி நகர் வீதி பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.268 | 5.00 | 73.00 |
| 18 | 98 | LIC காலனி பிரதான சாலை, காந்தி நகர், லட்சுமி நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.370 | 5.00 | 78.50 |
| 19 | 99 | ஈஸ்வரன் செட்டியார் வீதி, நேதாஜி நகர், சாமண்ணா நகர், முல்லை நகர் மற்றும் விவேகானந்தா நகர் பிரதான சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.436 | 5.00 | 89.50 |
| 20 | 99 | விவேகானந்தா நகர், ஸ்ரீராம் நகர், கனியப்பகோணார் வீதி பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 2.440 | 5.00 | 89.50 |
| 21 | 100 | கணேசபுரம் மெயின் ரோடு, ஸ்ரீனிவாசா நகர் வீதி, ரங்கநாதபுரம் மற்றும் கார்மல் நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.464 | 5.00 | 87.80 |
| 22 | 100 | முத்து நகர் மெயின் ரோடு மற்றும் ஐயப்பா நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.02 | 5.00 | 55.30 |
| 23 | 100 | ஹவுசிங்யுனிட் பேஸ்–II மெயின் ரோடு மற்றும் குறுக்கு வீதி பகுதிகளில் தார் தளம் அமைத்தல். | 1.700 | 5.00 | 102.50 |
| | | **மொத்தம்** | **45.118** | | **2969.4** |

**மேற்கு மண்டலம்**

| **வ. எண்** | **வார்டு எண்** | **வேலையின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **அகலம் (மீ)** | **தொகை இலட்சத்தில்** |
|---|---|---|---|---|---|
| 1 | 5 | அசோக் வீதி, லிங் ரோடு II, ஓனம்பாளையம் ரோடு பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.55 | 7.00 | 83.00 |
| 2 | 5 | அசோக் நகர் கீழ்புறம் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.74 | 5.50 | 80.00 |
| 3 | 5 | சுடுகாடு ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.30 | 5.50 | 55.00 |
| 4 | 6 | சரவணா நகர் சாலையை இணைக்கும் 60 அடி திட்ட சாலைக்கு தார் தளம் அமைத்தல் | 0.69 | 10.00 | 75.00 |
| 5 | 6 | அத்வானி நகர் மற்றும் நடராஜ் நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.67 | 5.50 | 86.00 |
| 6 | 8 | குட்டைகாடு மற்றும் கே.கே.நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.00 | 5.00 | 16.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 8 | சக்தி குமரன் நகர், ஆ.எஸ்.பி லேஅவுட் மற்றும் ஸ்ரீதேவி நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.10 | 4.50 | 21.00 |
| 8 | 9 | பிரிகால் காலனி, காந்தி நகர், எஸ்.கே.ஆர் நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.00 | 5.00 | 20.00 |
| 9 | 10 | கருணாநிதி நகர், மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.91 | 5.50 | 57.50 |
| 10 | 12 | ராமலிங்கா நகர் IIIrd குறுக்கு தெரு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.34 | 5.50 | 39.00 |
| 11 | 12 | ரத்தினசபாபதி (கோ–ஆப் காலனி) ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.45 | 6.50 | 39.00 |
| 12 | 13 | ராமசாமி லேஅவுட், விஸ்வேஷ்வராய் வீதி2, மற்றும் ஆர்.கே நாயுடு லே அவுட் நடு வீதி, குறுக்கு வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.56 | 6.00 | 35.60 |
| 13 | 15 | மாரியம்மன் கோவில் வீதி மற்றும் கே.கே. நகர் வீதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.73 | 5.50 | 41.00 |
| 14 | 16 | ஆர்.கே.ஜி நகர் மற்றும் மருதம் நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.12 | 5.50 | 62.40 |
| 15 | 17 | பாலாஜி நகர் மற்றும் நர்மதா வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.22 | 5.50 | 68.00 |
| 16 | 18 | சின்மயா நகர் மற்றும் குறிஞ்சி மின் நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.28 | 5.50 | 71.00 |
| 17 | 19 | குளிகாடு சாலை, ஸ்ரீ ராம் அவென்யூ, மற்றும் காந்தி நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.28 | 5.50 | 71.00 |
| 18 | 21 | நாயக்கர்தோட்டம் பிரதான & குறுக்கு வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.29 | 5.00 | 75.00 |
| 19 | 22 | ராஜா அண்ணாமலை ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.65 | 6.25 | 57.00 |
| 20 | 22 | பாரதி பார்க் ரோடு II பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.75 | 7.00 | 75.00 |
| 21 | 22 | அழகேசன் ரோடு I பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.78 | 7.50 | 75.00 |
| 22 | 22 | அழகேசன் ரோடு II பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.20 | 7.50 | 50.00 |
| 23 | 23 | பொன்னுரங்கம் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.15 | 7.80 | 75.00 |
| 24 | 23 | வெங்கடசாமி ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.15 | 7.80 | 75.00 |
| 25 | 23 | பெரியசாமி ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.16 | 7.80 | 75.00 |
| 26 | 23 | டி.பி சாலையில் கௌலி பிரவுன் ரோடு முதல் டி. வி. சாமி ரோடு வரை உள்ள பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.55 | 14.00 | 75.00 |
| 27 | 23 | டி.பி சாலையில் டி.வி.சாமி ரோடு முதல் ராமசந்திரா ரோடு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.47 | 19.00 | 75.00 |
| 28 | 23 | சர் சண்முகம் சாலையில் கௌவுளி பிரவுன் ரோடு முதல் டி.வி.சாமி ரோடு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.55 | 14.00 | 64.00 |
| 29 | 23 | சர் சண்முகம் சாலையில் டி.வி.சாமி ரோடு முதல் ராமசந்திரா ரோடு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.47 | 14.00 | 57.00 |
| 30 | 24 | டி.பி சாலையில் ராமசந்திரா ரோடு முதல் சுக்ரவார்பேட் கார்னர் வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.60 | 16.00 | 75.00 |
| 31 | 24 | மெக்ரிகர் சாலையில் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.10 | 8.00 | 52.50 |
| 32 | 24 | மேற்கு ஆரோக்யசாமி ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.90 | 7.50 | 43.00 |
| 33 | 24 | ஃபாதர் ராண்டி வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.52 | 5.00 | 20.00 |
| 34 | 24 | சர்.சி.வி.ராமன் வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.60 | 5.00 | 23.00 |
| | | **மொத்தம்** | **33.83** | | **1962.50** |

## மத்திய மண்டலம்

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 25 | தேவாங்கர் வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 7.50 | 7.00 | 40.00 |
| 2 | 25 | வி.சி.வி வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 5.60 | 10.00 | 41.00 |
| 3 | 51 | டாக்டர் அழகப்பா சாலையில் மேற்கு பவர் ஹவுஸ் ரோடு முதல் கிழக்கு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 4.50 | 17.00 | 60.25 |
| 4 | 51 | டாக்டர் அழகப்பா சாலையில் சங்கனூர் பள்ளம் முதல் மேற்கு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 4.50 | 18.00 | 73.65 |
| 5 | 51 | காந்திபுரம் 9வது வீதி விஸ்தரிப்பு சாலையில் 100அடி ரோடு முதல் வடக்கு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 5.00 | 10.00 | 40.90 |
| 6 | 51 | டாக்டர் ராதாகிருஷ்ணான் சாலையில் அழகப்பா ரோடு முதல் காந்திபுரம் 4 வது வீதி விஸ்தரிப்பு வரை உள்ள பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 5.50 | 10.00 | 43.70 |
| 7 | 51 | விவேகானந்தா ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 3.25 | 10.00 | 27.00 |
| 8 | 51 | நேரு வீதி பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 7.50 | 11.00 | 65.00 |
| 9 | 68 | கூட்செட் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 9.45 | 5.00 | 39.00 |
| 10 | 71 | தர்மராஜாகோயில் வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 4.00 | 8.00 | 40.00 |
| 11 | 71 | வெரைட்டி ஹால் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 6.00 | 9.00 | 60.00 |
| 12 | 71 | கன்னிகா பரமேஸ்வரி நகர், முருகன் நகர்,ஸ்ரீராம் காலனி, ராமலிங்கா ஜோதிநகர்–1, நேரு நகர் 1,2,3 & 4 பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 8.00 | 11.00 | 75.00 |
| 13 | 71 | ஏர் இந்தியா ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 8.00 | 7.00 | 48.00 |
| 14 | 71 | சாவித்திரி சண்முகம் நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 7.00 | 7.50 | 48.50 |
| 15 | 74 | டாக்டர்.முனுசாமி நகர் மற்றும் ஆறுமுகம் நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 7.00 | 9.00 | 48.50 |
| 16 | 74 | காமராஜர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 7.45 | 8.00 | 38.00 |
| 17 | 80 | அப்துல் ரஹிம் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 4.50 | 6.00 | 65.00 |
| 18 | 80 | இடையர் வீதியில் தார் தளம் அமைத்தல் | 9.50 | 6.00 | 74.00 |
| 19 | 80 | ரங்கே கவுடர் வீதி & தாமஸ் வீதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 5.50 | 6.00 | 73.00 |
| 20 | 80 | சுக்ரவார் பேட்டை மற்றும் டி.கே.வீதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 7.90 | 12.00 | 67.00 |
| 21 | 81 | திருஞானசம்பந்தம் ரோடு & ஜி.டி.ரோடு பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 7.00 | 12.00 | 61.00 |
| 22 | 81 | நியூஸ்கீம் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 4.75 | 6.00 | 74.00 |
| 23 | 82 | வின்சென்ட் சாலையில் ராயல் தியேட்டர் முதல் பைபாஸ் ரோடு வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 4.50 | 6.00 | 72.00 |
| 24 | 82 | வின்சென்ட் சாலையில் பைபாஸ் ரோடு முதல் உக்கடம் காவல் நிலையம் வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 2.60 | 10.00 | 21.50 |
| | | மொத்தம் | 14.65 | | 1296.00 |

## கிழக்கு மண்டலம்

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | 32 | திரு நகர் மற்றும் வி நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 2.60 | 5.00 | 75.00 |
| 2 | 33 | ஸ்ரீ குமரன் நகர், வள்ளார் நகர், ஐய்யப்பா நகர்,உமையாள் நகர் மற்றும் அண்ணாமலை நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 2.13 | 5.00 | 70.00 |
| 3 | 34 | இளங்கோ நகர் மெயின் ரோடு மற்றும் ராஜீவ் காந்தி நகர் இணைப்பு சாலை, நல்லாசிரியர் நகர் மற்றும் அய்யா சாமி நகர் உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 3.90 | 5.00 | 65.00 |
| 4 | 34 | வீரியம்பாளையம் ரோடு (பி.ஜி.லே அவுட் வழியில்) மற்றும் காளபட்டி மாரியம்மன் வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 3.48 | 6.00 | 55.00 |
| 5 | 35 | கோவை திருநகர், துரைசாமி லேஅவுட் மற்றும் ஆசிரியர் காலனி பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 3.10 | 7.00 | 75.00 |
| 6 | 36 | சௌபாக்கியாநகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 0.85 | 7.00 | 28.44 |
| 7 | 37 | பாரதி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு வீதி பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.45 | 6.00 | 55.00 |
| 8 | 37 | இந்துமாநகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு வீதி பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.65 | 7.00 | 64.00 |
| 9 | 37 | தண்ணீர் பந்தல் வீதி எண் 6,7 பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.80 | 6.50 | 75.00 |
| 10 | 56 | ஃபன்மால் சாலையில் சௌரிபாளையம் ரோடு சந்திப்பு முதல் மசகாளிபாளையம் ரோடு சந்திப்பு வரை உள்ள பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.22 | 7.50 | 73.00 |
| 11 | 56 | ஃபன் மால் சாலையில் மசகாளிபாளையம் ரோடு சந்திப்பு முதல் அவினாசி ரோடு சந்திப்பு வரை உள்ள பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.91 | 6.00 | 65.00 |
| 12 | 57 | அம்மா உணவகம் முதல் சௌரிபாளையம் ரோடு வரை (ஃ பன்மால் தெற்கு அருகில்) பகுதியில் தார் தளம் அமைத்தல் | 1.00 | 12.00 | 75.00 |
| 13 | 57 | அம்மா உணவகம் முதல் சௌரிபாளையம் ரோடு வரை (ஃ பன்மால் வடக்கு அருகில்) பகுதியில் தார் தளம் அமைத்தல் | 1.20 | 12.00 | 75.00 |
| 14 | 58 | நீலிகோணாம்பாளையம் பகுதியில் சக்தி நகர் கிழக்கு பகுதி மற்றும் பகுரு லே அவுட் பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 1.89 | 9.00 | 55.00 |
| 15 | 58 | நீலிகோணாம்பாளையம் பகுதியில் சக்தி நகர் மேற்கு பகுதியில் தார் தளம் அமைத்தல் | 1.98 | 6.50 | 65.00 |
| 16 | 64 | உப்பிலிபாளையம் RVL காலனி மற்றும் கமலா மில் குட்டை கிழக்கு மேற்கு சாலைகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.29 | 6.50 | 55.40 |
| 17 | 64 | சிங்காநல்லூர் பஸ் நிலையம் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.42 | 10.50 | 28.00 |
| 18 | 64 | குமரன் வீதி மற்றும் குளத்தேரி பிரிவு சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 0.82 | 11.50 | 52.50 |
| 19 | 64 | உப்பிலிபாளையம் பை பாஸ் ரோடு பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 0.80 | 12.00 | 53.00 |
| 20 | 64 | சிங்காநல்லூர் ஹவுசிங்யுனிட் C பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.20 | 6.50 | 52.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | 65 | உடையாம் பாளையம், மாரியம்மன் கோயில் வீதி எண்.2 ,3 மற்றும் சவுரிபாளையம் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 0.93 | 8.50 | 55.00 |
| 22 | 59 | SIHS காலனி மற்றும் காவேரி நகரில் தார் தளம் புதுப்பித்தல் | 2.90 | 9.00 | 81.00 |
| 23 | 59 | VOC நகர் , திருவிக நகர், எம்ஜிஆர் நகர் மற்றும் சக்தி நகர் மற்றும் விஸ்தரிப்பு பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 1.75 | 5.00 | 76.00 |
| 24 | 59 | சூரியாநகர் விஸ்தரிப்பு, காமாட்சி நகர் மற்றும் அம்மன் நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 1.43 | 6.00 | 56.50 |
| 25 | 60 | SMS லேஅவுட் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.38 | 8.10 | 37.50 |
| 26 | 61 | சாஸ்திரி நகர், நெசவாளர் காலனி மற்றும் ராமசந்திரா நகர் பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.57 | 9.00 | 67.50 |
| 27 | 62 | NR மணி லே அவுட் மற்றும் முத்து மாரியம்மன் கோயில் வீதி உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.34 | 5.00 | 49.00 |
| 28 | 62 | நேரு பூங்கா வீதி மற்றும் கோதாரி மில் ரோடு உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.96 | 5.00 | 74.20 |
| 29 | 62 | காமராஜா ரோடு முதல் நீலிகோணாம்பாளையம் வரை உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.20 | 5.00 | 40.00 |
| 30 | 63 | அக்ரகாரம் கிழக்கு,மேற்கு சாலைகள் மற்றும் பட்டத்தரசியம்மன் கோவில் வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.30 | 5.00 | 49.50 |
| 31 | 63 | மயானம் சாலைகள் மற்றும் நடு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.20 | 5.00 | 62.00 |
| 32 | 63 | ராஜா வீதி கள்ளிமடை மற்றும் போயர் வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 1.89 | 5.50 | 75.00 |
| | | **மொத்தம்** | **52.54** | | **1934.54** |

| வ.எண் | மண்டலம் | பணிகளின் எண்ணிக்கை | சாலையின் மொத்த நீளம் கி.மீட்டரில் | மொத்த மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம் | 32 | 52.54 | 1934.54 |
| 2 | மேற்கு மண்டலம் | 34 | 33.83 | 1962.50 |
| 3 | வடக்கு மண்டலம் | 25 | 30.39 | 1827.50 |
| 4 | தெற்கு மண்டலம் | 23 | 45.118 | 2969.40 |
| 5 | மத்திய மண்டலம் | 24 | 14.65 | 1296.00 |
| **மொத்தம்** | | **138** | **176.528** | **9989.94** |

எனவே, மேற்காண் **176.528**கிமீ நீளமுள்ள சாலைப்பணிகளை மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு ரூ.**9989.94** இலட்சங்களை தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு நிறுவனம் (TNUDF) மூலம் KFW ஜெர்மன் நிதி உதவி வங்கி அல்லது உலக வங்கியிலிருந்து கடனுதவி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுமதி கோரி கருத்துரு மற்றும் திருத்திய விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.**2689/2015**/எம்.டி.**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 17.07.2015**

பொருளில் மத்திய மண்டலம் என்ற தலைப்பின் கீழ் உள்ள வரிசை எண் 12ல் வார்டு எண் 71 என்பதற்கு பதிலாக 68 என்றும், வரிசை எண்கள் 15, 16, 17, 21 மற்றும் 22 ஆகியவற்றில் குறிக்கப்பெற்றுள்ள வார்டு எண்கள் 74, 74, 80, 81 மற்றும் 81 என்பதற்கு பதிலாக வார்டு எண் 71 எனவும் திருத்தம் செய்து அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

**பொருள்-** நிா்வாகம் - கல்வி – இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டு குழு - 2nd Asian School Athletics U-18 Boys & Girls Championship to be held at Wuhan P.R. China – தெரிவு மற்றும் தேசிய பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மாநகராட்சி சித்தாபுதூா் மேல்நிலைப்பள்ளி 12-ம் வகுப்பு மாணவன் செல்வன்.என்.விவேகானந்தன் - தோ்வு செய்யப் பட்டது – சீன நாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்படும் செலவினங்களுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து - நிதி உதவி வழங்குவது – சாா்பு.

---

மாநகராட்சி சித்தாபுதூா் மேல்நிலைப்பள்ளியில் 12-ம் வகுப்பு பயிலும் மாணவன் செல்வன்.என்.விவேகானந்தன் 27.06.2015 முதல் 02.07.2015 முடிய நடைபெற்ற ஆசிய அளவிலான 2nd Asian School Athletics U-18 Boys & Girls Championship போட்டிகளில் U-19 வயது பிரிவிற்கான உயரம் தாண்டுதல் போட்டியில் கலந்து கொள்ள சீன மக்கள் குடியரசின் "Wuhan" செல்ல ஏற்படும் பயணச்செலவுகள் மற்றும் இதர செலவினங்களுக்கு ஏற்படும் செலவினத் தொகையான ரூ.2.00 இலட்சத்தை மாநகராட்சி நிதியிலிருந்து அம்மாணவருக்கு முன்பணமாக வழங்கிட முடிவு செய்யப்பட்டது.

மேற்படி தொகை 10.06.2015-க்குள் சம்பந்தப்பட்ட மாணவரது சாா்பில் School Games Federation of India வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டியிருந்ததால், இத்தொகை அரசால் வழங்கப்படும் பொழுது அம்மாணவா் மாநகராட்சிக்கு திரும்ப செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அம்மாணவரது சாா்பில் மேற்படி போட்டிகளுக்கு அகில இந்திய அளவில் வீரா்களை தோ்வு செய்யும், "School Games Federation of India " பொது செயலாளா் பெறத்தக்க வகையில் 15.06.2015 அன்று உாிய வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

அவசர அவசியத்தைக் கருதி, மேற்படி தொகைக்குாிய நிதியினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு, மாநகராட்சி மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண்.4487/2015/கே-12

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 46 நாள் 17.07.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூா் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பாிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பாிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தோ்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரா் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3355/ 2014/ எம்.டி4 | குனியமுத்தூாில் புதிய தெற்கு மண்டல அலுவலக கட்டிடம் கட்டுதல் | 490.00 | 30.04.15 முதலாம் அழைப்பு | 1. தி/ள். மேகவா்ணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் கோயம்புத்தூா் 9.00% அதிகம்<br>2. தி/ள். எஸ்.பி. & கோ. சேலம் 13.40% அதிகம் | தி/ள். மேகவா்ணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் கோயம்புத்தூா் 4.98% அதிகம் (இரண்டாம் முறை விலை குறைப்பிற்குப் பின்) |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்தப்புள்ளியிளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மேற்படி பட்டியலில் குறிப்பிட்ட பணிகள் கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோாினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்காக மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3355/2015/எம்.டி.4

## மாநகர மன்ற தீர்மானம் எண் 47 நாள் 17.07.2015

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

பொருள் :- பொதுக் கணக்குப் பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கதர் கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து, மாநகராட்சிப் பணியாளர்களுக்கு கதர்க்கடன் வழங்கிய வகையில் நிலுவையாக உள்ள தொகை ரூ.2,42,561.65பைசாவை நேர் செய்யக் கோரியது – தொடர்பாக

பார்வை :- 1. உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1933 / 2002 / கே2 நாள். 18.11.14, 5.02.2015, 20.02.15 மற்றும் 27.03.2015
2. மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்ட நாள்.05.05.2015
3. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்ற நாள். 15.5.15

******

பார்வையில் 1ல் காணும் 20.02.2015ம் தேதிய கடிதத்தில், உதவி இயக்குநர், கதர்கிராமத் தொழில் வாரியம் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி பணியாளர்களுக்கு 98–99ம் ஆண்டு முதல் 2003–04ம் ஆண்டு முடிய தவணை முறையில் கதர் இரகங்கள் கடன் முறையில் வழங்கிய வகையில் ரூ.2,42,562/– நிலுவையுள்ளதாகவும், மேற்படி நிலுவைத் தொகையை மாநகராட்சி கடைஎண்.10, ஆர்.எஸ்.புரத்தில் இயங்கி வரும் கதர் அங்காடி, மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட வாடகைத் தொகை ரூ.6,32,486/– ல் சரிகட்டிவிட்டு, மீதமுள்ள கட்டிட வாடகை நிலுவைத் தொகையை செலுத்துவதாக தெரிவித்திருந்தனர்.

99–00 மற்றும் 2000–2001ம் ஆண்டுகளில் கதர் கடன் பெற்ற பணியாளர்கள் தற்போது பணிபுரியும் விபரம் அறிய இயலவில்லை. இதில் பலர் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டனர் மற்றும் சிலர் காலமாகிவிட்டதாக தெரிகிறது. எனவே பணியாளர் குறித்த விபரம் முழுமையாக தெரியாத நிலை உள்ளதாலும், கடன் விண்ணப்பப் படிவத்தில் ஒப்புதல் அளித்த அலுவலர்களின் விபரங்களும் தெரியாத நிலை இருப்பதாலும், மாநகராட்சிப் பணியாளர்கள் கதர் கடன் பெற்ற வகையில் நிலுவையிலுள்ள தொகை ரூ.2,42,562/–யை, மாநகராட்சிக்கு 2001–02 முதல் 2014–15ம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய கட்டிட வாடகை நிலுவைத் தொகை ரூ.6,32,486/–ல் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் சரிகட்டிவிட்டு, மீதமுள்ள கட்டிட வாடகை நிலுவைத் தொகை ரூ.3,89,924/–யை வசூல் செய்ய அனுமதிக்கலாம்.

மேலும், மேற்படித் தொகைக்கு பொறுப்பாக்கப்பட்ட கதர் கிராமத் தொழில்கள் வாரிய பணியாளர் திருமதி. சாந்தகுமாரி அவர்கள் 31.05.2015 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதால் மேற்படித் தொகையை கடை வாடகை நிலுவைத் தொகையில் சரிகட்ட, மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண். 2613 / 2013 / பி–14

## மாநகர மன்ற தீர்மானம் எண் 48 நாள் 17.07.2015

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள் : பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – பொங்கல் பண்டிகையை முன்னிட்டு துப்புரவுப் பணியாளர்களுக்கு பொங்கல் பொருட்களுக்கான தொகை வழங்கியது – தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளை தூய்மையாக பராமரிப்பதை கருத்தில் கொண்டு அனைத்து துப்புரவுப் பணியாளர்களுக்கும் இந்த வருடம் பொங்கல் பண்டிகையை சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் மாநகராட்சியின் அனைத்து மண்டலத்திலும் பணியாற்றும் 2875 துப்புரவுப் பணியாளர்களுக்கும் தலா ரூ 290/– வீதம் சுமார் ரூ 8,33,750/– மதிப்பிலான பொங்கல் சிறப்பு பொருட்கள் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி மூலம் வாங்கி வழங்குவதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பின்னேற்பு வழங்கலாம். ந.க.எண். 299/2015/எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 17.07.2015</u>**

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு -மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் பன்றிகளை பிடித்தல் - தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளால் பொது மக்களுக்கு இடையூறுகள், சுகாதார சீர்கேடுகள் மற்றும் தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு உள்ளதால் ஒப்பந்ததாரர் மூலம் அப்பன்றிகளை வலை மூலம் உயிருடன் பிடித்து மாநகராட்சி எல்லைக்கு அப்பால் கொண்டு விடுவதற்கும் பன்றி ஒன்றிக்கு ரூ.100/- ஐ மாநகராட்சிக்கு செலுத்தவும், ஒப்பந்ததாரருக்கு மாமன்ற தீர்மான எண். 179, நாள். 29.08.2013ந் தேதி தீர்மானத்தின் படியும், ஆணையாளர் அவர்களின் 05.01.2014ம் தேதிய உத்தரவிற்கிணங்க மாநகர நல அலுவலரால் திரு.சி.ராஜலிங்கம், திருமங்கலம் அவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய உத்தரவு வழங்கப்பட்டு ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் மேற்படியார் பன்றிகளை பிடிக்கும் பணிகள் செய்வதில்லை.

தற்போது மேற்படி பணியை மேற்கொள்ள திரு.ஆர்.சிவக்குமார் (ஆல் இந்தியா பிக் அண்டு டாக் கேட்சர்ஸ்) என்பவர் மாநகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து மாநகராட்சி எல்லைக்கு அப்பால் கொண்டு விடுவதற்கு கோவை மாநகராட்சிக்கு கட்டணமாக பன்றி ஒன்றிக்கு ரூ.150/- செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.

எனவே, தி/ள். ஆல் இந்தியா பிக் அண்டு டாக் கேட்சர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஆர்.சிவக்குமார் என்பவர் மூலம் தெருக்களில் சுற்றித் திரியும் பன்றிகளை அப்புறப்படுத்துவதற்கும் பிடிக்கப்படும் பன்றி ஒன்றிக்கு ரூ.150/- வீதம் மாநகராட்சிக்கு செலுத்துவதற்கும், சுகாதார நிலைக்குழு தீர்மான எண்.88, நாள்.13.04.2015ல் அனுமதி வழங்கியுள்ளது, இப்பொருள் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் :- 3526/ 2013/ எம்.இ.4 (எம்.இ.2)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 50 நாள் 17.07.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண் 85க்குட்பட்ட சாவித்திரி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் பணிக்காக ரூ.60.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தீர்மானம் எண்.333 நாள் 19.12.2014 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 27.03.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ் கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 85க்குட்பட்ட சாவித்திரி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 60.00 | 27.03.2015 முதலாம் அழைப்பு | 1). திரு/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 6.13% அதிகம்<br>2). திரு/ள்.எஸ்.பி. பில்டர்ஸ் 7.16% அதிகம் | திரு/ள்.கேசிபி இன்ஜினியர்ஸ் பி லிட் 4.98 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

இந்நிலையில் உக்கடம் புறவழிச்சாலையில் சாவித்திரி நகரிலிருந்து சுண்டக்காமுத்தூர் சாலைவரை இப்பணியினை மேற்கொள்ளவும், மேலும் இப்பணியை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் இப்பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கவும் மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் இப்பணியை மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கிய முன்அனுமதிக்கு பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.7358/2014/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 51 நாள் 17.07.2015**

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைநிரப்பு நிதி – 2014–15ல் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 07.05.2015 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | சிறுவாணி அடிவாரம் முதல் காந்திபூங்காவில் உள்ள தரைமட்ட தொட்டிவரை அமைக்கப்பட்ட பழைய பழுதடைந்த 450 மிமீ விட்டமுள்ள இரும்பு குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல் | 430.00 | 20.04.15 முதலாம் அழைப்பு | 1). திரு/ள்.கிளாசிக் இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் 7.19 % **அதிகம்**<br>2).திரு/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்,. 6.01 % **அதிகம்** | திரு/ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்,. 4.98 % **அதிகம் (விலை குறைப்பிற்கு பின்)** |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

ந.க.எண்.11091/2014/எம்.டி.2

## மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 17.07.2015

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் புதியதாக 7 நிழற்குடைகள் அமைத்தும் ஏற்கனவே மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 18 நிழற்குடைகளை புனரமைத்து விளம்பர உரிமத்துடன் பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள BOT முறையில் 15 வருடங்களுக்கு அனுமதியும் மேலும் 5 வருடங்களுக்கு அனுமதி பெற்று புதுப்பிக்கவும். ஒப்பந்தப்புள்ளி 08.05.2011ல் கோரப்பட்டதில் கீழ்கண்ட ஐந்து நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர்.

1. தி/ள் ஏ.வி.ஏ அசோசியேட்ஸ் , கோவை
2. தி/ள் க்ரியேட்டிவ் சைன்ஸ், கோவை
3. தி/ள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வர்டைசிங் இந்தியா பி.லிட், சென்னை
4. தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட், கோவை
5. தி/ள் வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்சர், கோவை

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை திறனாய்வு செய்ததில் 1. தி/ள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வர்டைசிங் இந்தியா பி.லிட் , 2. தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் ஆகிய இரு நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதியில் தேர்வு பெற்றுள்ளனர். மேற்படி இரு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று விலைப்புள்ளி உறையை திறக்க ஆணையர் ஒப்புதல் வழங்கியதன்படி விலைப்புள்ளி உறைகள் 21.05.2015ல் திறக்கப்பட்டன. அதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

| வ.எண். | நிறுவனம் | 25பயணியர் நிழற்குடைகளுக்கு வருடாந்திர ஏலத்தொகை |
|---|---|---|
| 1. | தி/ள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வர்டைசிங் இந்தியா பி.லிட் | ரூ.13,74,000/- |
| 2. | தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் | ரூ.13,31,000/- |

மேற்குறித்த இரண்டு நிறுவனங்களில் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.13,74,000/- தினை குறிப்பிட்டுள்ள தி/ள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வர்டைசிங் இந்தியா பி.லிட், நிறுவனத்திற்கு வருடாந்திர ஏலத் தொகையினை உயர்த்தி கொடுக்க கோரப்பட்டதில், மேற்படி நிறுவனம் தமது கடிதத்தில் ரூ. 13,99,000/- க்கு உயர்த்தி கொடுத்துள்ளனர்.

எனவே தி/ள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வர்டைசிங் இந்தியா பி.லிட், நிறுவனத்திற்கு ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003ல் குறிப்பிட்டுள்ள படி விளம்பர உரிமத்துடன் 15 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடைகளை புதுப்பிக்கவும், பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும் 15 ஆண்டு முடிவிற்கு பின்னர் மேலும் 5 ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்

அலுவலககுறிப்பு - மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் ந.க.எண்:1924/2015/எம்.எச்.5

## மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 17.07.2015

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11361/2014/எம்.டி.3 | வார்டு எண்.57 மசக்காளிபாளையம் சாலை பெரியாார் நகர் முதல் பழனி கோனார் வீதி வரை MS பைப் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் | 25.00 | 06.04.2015 முதலாம் அழைப்பு | 1.தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 5.67% அதிகம்<br>2.தி/ள்.வர்தான் இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 4.98% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 11363/2014/எம்.டி.3 | வார்டு எண்.57 மசக்காளிபாளையம் சாலை DJ நகர் முதல் சங்கர் மனைப்பிரிவு வரை MS பைப் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல | 75.00 | 06.04.2015 முதலாம் அழைப்பு | 1.திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 5.01% அதிகம்<br>2. திரு/ள்.வர்தான் இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் | திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 4.98% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 11362/2014/எம்.டி.3 | வார்டு எண்.57 மசக்காளிபாளையம் சாலை ரிலையன்ஸ் முதல் பெரியார் நகர் வரை MS பைப் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் | **75.00** | **06.04.2015 முதலாம் அழைப்பு** | 1.திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 5.00% அதிகம்<br>2. திரு/ள்.வர்தான் இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் | திரு/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் 4.98% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

